ஓலை 130| ஓசை 253| ஜூலை 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## அரசன் சண்முகனார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்

## பொருள்

பின்னர் வரப்போவதை முன்னதாகவே அறிந்து காக்கும் அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வருவதான ஒரு துன்பமும் இல்லை.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை!

## பாவகை : வஞ்சித் துறை

வளர்ந்தமரமோ பழம்தரும்
வளர்ந்துகற்றவர் அஃதென
தளர்வின்றியே நிற்றலே
மலருமறமே அறிவிரே!

**இலக்கணக் குறிப்பு:**

இது குறளடியால் நான்கு அடி மட்டும் தனித்து வந்ததால் வஞ்சித் துறை ஆயிற்று.
ஒவ்வோரடியிலும் கனிச்சீரும், விளச்சீருமாய் அமையும்.




## பாவகை : வஞ்சி மண்டிலம்

கற்றே அறிவாய் கல்வியை
பற்றே வைப்பாய் பாங்கென
அற்றே நிற்பாய் தனக்கென
கற்றே தெளிவாய் அறத்தினை!




**இலக்கணக் குறிப்பு:**

சிந்தடி நான்கு கொண்டது வஞ்சி மண்டலமாகும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை வரும்.

# உழவு

**பாவகை : குறள் வெண்பா**

1. சுழலும் உலகிலே சுற்றும் உயிர்கள்
   உழலும் உணவால் உணர்.

2. உணர்ச்சி பெருக உடலுமே சோரும்
   உணர்ந்தே உழவினை உள்ளு.

3. உள்ளுவோர் நாளும் உழவரைப் போற்றியே
   அள்ளியே உண்பாரே அட்டு.

4. அட்டிய சோற்றையும் அன்பாய்ப் பகிர்ந்தே
   மட்டிலாச் சிறப்பால் மதர்.

5. மதர்த்த நிலத்தாலே மக்கள் மகிழ்வர்
   சுதமிலாப் பூமியின் சுழல்.

6. உழவின்றேல் குன்றும் உணவால் மக்கள்
   சுழலாமல் கேடுமே சூழும்.

7. சூழும் உயிர்கள் சுணங்கிப் பிணமாக
   வீழுமே மண்ணிலே வீணாய்.

8. வீணாய் கிடக்கும் விளைநிலம் தன்னை
   விடியலில் பண்படுத்தல் வீம்பு.

9. வீம்பாய் உழுதால் விளையும் பயிர்களும்
   தெம்பைக் கொடுக்கும் தெளி.

10. தெளிவுடை மக்களும் தெவ்வரும் நாளும்
    அளியுடன் போற்றும் உழவு



**கவிஞர் செ. கலைவாணி**

ஊஞ்சல் ஆட்டம்
மேல் நோக்கிச் செல்லும்
எண்ணப் பறவைகள்
##
பாரம்பரிய விளையாட்டுகள்
மெல்ல அருகிச் செல்லும்
சிறுவர்களின் குதூகலம்.
@@
மலை ஏற்றம்
உச்சத்தைத் தொடுவதில் ஆர்வம்
கைகொடுக்கும் நம்பிக்கை
##
விடா முயற்சி
விடாமல் பிடித்துக் கொள்ளும்
உதவும் கரங்கள்
@@
பாத்திரங்கள் தேய்த்தல்
அம்மா பெற்ற வரமோ?
சிந்தனையில் மகன்
##
ஏழையின் கண்ணீரில்
தன்னையும் இணைக்கிறது
பெய்யும் மழை



கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# இதழ்க்கோடி நகைப்பு

யானைக்கு எறும்பால் மரணமா?
இரும்புக்கு துருவால் அழிவா?
ஏகலைவனுக்கு துருவால் கெடுதலா?
இயேசு பிரானுக்கு உடனிருந்தே துரோகமா?

ஆமாம்! ஆமாம்!ஆமாம்!
ஏளனமாக நினைப்போரே எமனாக வருவர்
ஏற்பதும் இகழ்வதும் அவரவர் விருப்பம்
வரலாறு சொல்லும் திருப்பம்

இராவணன் சாகாவரம் கேட்கிறான்
பிரம்மனும் அளிக்கிறான்
பதிலுக்கு நீ என்ன தருவாய்?
தலையை கொய்து தருவேன்

இம்முறை வியந்தது பிரம்மன்
சாகாவரம் கேட்டு சாகத் துணிகிறாயே?
கேட்பது உயர்வானது
தருவதும் அதுவாகத் தானே இருக்க வேண்டும்?

நொடியும் தாமதிக்கவில்லை இராவணன்
எடுத்தான் வாளை! கொய்தான் தலையை
விக்கித்துப் போனான் பிரம்மன்
கொய்த பின் அல்ல கொய்யு முன்
பாதத்தில் வைத்தான் தலையை

நொடியும் தாமதிக்கவில்லை பிரம்மன்
கொய்ததும் கொடுத்ததும்
இப்போது இரண்டு தலை இராவணன்
மறுமுறை! மறுமுறை! ஒன்பது முறை
நிரூபித்தான் தன் பக்தியை



இப்போது பத்து தலை இராவணன்
பத்து தலை! பத்து பக்தி! பத்து சக்தி!
தேவனால் அசுரனால் விலங்கால்
பறவையால் ஊர்வன நகர்வன ஏதாலும்
நிகழாது மரணம் உனக்கு

நீ கேட்டது அவ்வளவு தானே?
இதழ்க்கோடி நகைப்பு பிரம்மனுக்கு
இருபது கண்ணும் கவனிக்க தவறியது
பட்டியலில் மனிதன் இல்லாதது

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# மரங்களின் கால்கள்

கண்ணிற்குத் தெரியாமல் காத்து நிற்கும் ;
கற்களையும் வளைத்திட்டே ஆழம் பாயும் !
எண்திசையும் பூமிதன்னில் பரவி வளரும் ;
இயல்புக்கு ஏற்றால்போல அடிகள் நீளும் !
நுண்மை கொண்டு நீரைஉரிஞ்சி வளத்தைச் சேர்க்கும் ;
நூறடியாம் மரங்களையும் வேர்தான் தாங்கும் !
மண்ணிற்குள் மரத்தினது கால்கள் போல
மாண்புறவே தாங்கிநிற்கும் வேர்கள் தாயே !



உடல்தானும் நின்றசைய கால்கள் வேண்டும் ;
உயிர்தானும் நிலைத்திருக்க மூச்சே காலாம் !
இடநாடி பிங்கலையாய் யோகம் சொல்லும் ;
இருநாடி சித்தியானால் மரணம் வெல்லும் !
கடந்திட்ட மனக்கால்கள் அறிவைத் தேடும் ;
காலத்தை வெல்லும்நூல் பலவும் படைக்கும் !
திடமாக உடலோம்ப நாளும் நடப்பீர் ;
சிலநிமிடம் நடந்திட்டால் வாழ்நாள் கூடும் !

தமிழினத்தின் வேராழம் கீழடி சொல்லும் ;
தமிழர்பண் புரைத்திடுமே கணியன் கூற்றும் !
அமிழ்தாகும் நாகரீகம் குறளும் காட்டும் ;
அளப்பரிய ஞானமறிய அவ்வை நூல்கள் !
ஆலமரம் போலுலகில் பரவும் தமிழர் ;
அணைத்திட்டே ஒருங்கிணைக்கும் விழுதாய் நாமும் !
காலமறிந்து இனவேர்கள் கூடி வாழின்
கண்டங்கள் மறைந்திட்டே வளமும் ஓங்கும் !

கவிஞர் ஆ. சு. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# இணைந்த நதிகள்



ஓடிக்கொண்டிருக்கும்
நதியில்,
ஆசையாசையாய்
நானொரு
நதி வரைந்தேன்.
நான் வரைந்த
நதியையும்
மறுப்பின்றி
தழுவிக் கொண்டோடிக்
கொண்டிருக்கிறது
தாய்நதியாய்
அந்நதி...

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# அவள் நனைத்த கடற்கரை

திறக்கப்படா பூட்டு
தீண்டும் தக்கை
தாழ் மௌனம் நீக்குமா.

மெல்லத் திறந்த மனம்
புன்னகை பூத்த பூக்கள்
அலை நனைத்த கடற்கரை
அவள் தீண்ட.

விழி நிறைய கனவு
காலம் கை கொடுக்குமா?



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# காதல் சிறப்புரைத்தல்

## அதிகாரம் : 113



மென்மொழிபேசும் இவள்
வெள்ளிப்பற்களிடை ஊறும்நீர்.
பாலொடு தேன்கலந்தார்போல
நனிசுவை யுடையதாமே.

இம்மடந்தையொடு காதலனிடத்து
உண்டான உறவென்பது.
உடம்பொடு உயிருக்குமான
தொடர்பு போன்றதாமே.

கண்மணியின் கரும்பாவையே
அவ்விடம்விட்டு நீங்கிப்போ.
கன்னியிவள் என்கண்ணிற்குள்
இருக்க வேறிடமில்லையே.

அணிபூண்ட இம்மங்கை
என்னுடனிருக்க உயிர்வாழுமே.
பிரிந்திடின் அவ்வுயிர்
சாதலை யொத்ததாமே.

போர்புரியும் ஒளிபொருந்திய
இவள்விழிகளை யான்மறந்தால்.
திரும்ப நினைக்கவியலுமெனினும்
நானொருபோதும் மறந்ததில்லையே.

கண்ணினின்று நீங்காத
என்காதலனை கண்ணிமைத்து.
அழுத்திடினும் அதற்காய்வருந்தா
அவர் நுட்பமானவரே.

கண்ணுள்ளிருக்கு மெம்காதலன்
மைவரைய மறைந்திடுவாரென.
எண்ணி எம்கண்களுக்கு
மையும் தீட்டமாட்டோமே.

நெஞ்சிருக்கு மெம்காதலன்
சூடாய் உணவுண்டால்.
வெப்பமுறுவரே என்றெண்ணி
உண்ணுதற்கே அஞ்சுகின்றோமே.

கண்ணுள்ளிருக்கும் காதலன்
இமைத்திடின் மறைந்திடுமட்டில்.
அவ்வளவிற்கே இவ்வூரார்
அவர் அன்பற்றவரென்கிறாரே.

காதலன் எம்முள்ளத்துள்ளிருந்து
மகிழ்ந்திருக்கும்போதே இவ்வூரார்.
அன்பின்றி அவர்பிரிந்தாரென
அவரைப் பழிக்கின்றனரே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# மத்தாளங் கொட்டுதடி மனசு



கண்டாங்கிச் சேலகட்டி
கழனிக்குப் போறபுள்ள

கண்டவங்க கண்படுமே
கவனமாக இருந்துக்கடி

மணப் பொண்ணா
மாறுவது எப்போ

ஆசையோட நானிருக்கேன்
மாலையிடக் காத்திருக்கேன்

சம்மதம் சொல்லிடு
சந்தோசமா வாழலாம்

ஒநெனப்புல மத்தாளங்
கொட்டுதடி மனசு

மல்லிகைப்பூக் கொண்டையில
மச்சான முடிஞ்சிக்கடி

ஊரெல்லாம் தேடுறேன்
ஒன்னாட்டம் யாருமில்ல

அம்சமாக நீயிருக்க
பத்திரமா பாத்துக்கிறேன்

பரிசந்தான் போடுறதெப்போ
பந்தக்காலு நட்டிடத்தான்

நல்லநாளும் வந்திடாதோ
ஒண்ணா வாழ்ந்திடத்தான்

கெட்டிமேளம் சத்தம்
வெரசா கேக்கட்டுமே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நம்பிக்கையின் ஒளி



விழித்தால் விடியும் விடியற்காலை
விழிகளுக்குள்ளே விழுந்திருக்கும் வெள்ளிச்சோதி
ஒரு நாள் தான் போதும் மாற்றம் ஏற்பட
அது இன்று இருக்கலாம் - நீ நம்பிக்கையுடன் வாழ்ந்தால்!

தோல்வி வந்தால் அது ஓர் ஆசான்
தொலைந்ததோடு சேரும் ஒரு பாடம்.
பிழைகள்? பெருமையாய் திருந்தும் படிகள்
பிரச்சனைகள்? பதில்கொடுத்த பெரும்

உன் உள்ளம் தான் உன் உலகம்
அதில் விதைக்கும் ஒவ்வொரு சிந்தனையும்
ஒரு நாளும் பூத்திடும் நறுமணமாக.
நீ சொல்வது — "நான் முடியும்!" என்றால்
உலகமே உன் அருகே நிமிர்ந்திடும்!

பூக்கள் மாதிரி நீயும் மலர்ந்திடு
புயல் வந்தாலும் வேர்தொட்ட நம்பிக்கை கொண்டு.
ஒவ்வொரு நாளும் ஒரு புதிய தொடக்கம்
ஓர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட வாழ்வின் பிரகாசம்!

பயணம் என்பது புகல் அல்ல
ஒரு பயிற்சி, ஒரு பொக்கிஷம்
ஒரு பயிர், ஒரு பரிசு.
சமயமும், சமயமில்லாத நேரங்களும்
செய்துச் செலுத்தும் வாழ்க்கையின் ஓர் பாடமே!

கவிஞர் பானு அப்துல்லா

# மலரிதழில் மடிந்தேனடி!



மலரிதழில் மடிந்தேனடி
மயங்கியே பறந்தேனடி.

மஞ்சத்தில் விழுந்தாயடி
மனவெளியில் மறந்தேனடி.

நிலவினை மணந்தாயடி
நினைவினை தொலைத்தேனடி.

நிழல் எல்லாம் இழந்தாயடி
நிந்திக்கவோ மனமில்லையடி.

நிகழ்காலம் தந்தாயடி
நிசங்களைச் சமைத்தாயடி.

நில்லாமல் போனாயடி
நிறங்களாய் நின்றாயடி.

நிலமகளாய் திகழ்ந்தாயடி.
நீக்கமற நிறைந்தாயடி.

நிகழ்வாய் தித்தித்தாயடி
நிரப்பிட வருவாயடி.

நினைவுகளே நீயானாயடி
நித்திரைகளை தொலைத்தேனடி.

நிலவொளியைக் கொணர்ந்தாயடி
நிசப்தமாய் நின்றேனடி.

நிறம்மாறா பூவாயானாடி
நீக்கமின்றி நிறைந்தாயடி

மடிந்த மலர்கள் விரியவில்லையடி
மங்கையின் மனதிலேயே
சிறைவாசமேயடியே.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# வற்றாத நதியாய் என் காதல்



என்னவனின் அன்பே
எனது மூச்சு காற்று
இந்த அகிலத்தில் நான்
பெரிதாக நினைக்கும் இடத்தில்
இருப்பவன் அவன் ஒருத்தன் மட்டுமே
என் இமை மூடும் வரை
அவனையே கண்டு களித்து மகிழ்வேன்
அவனின் பாசத்திற்கு இங்கு
ஈடு இணை ஒன்றும் இல்லையே
உன்னை தாண்டி
எனக்கு வேறு உலகம் உண்டோ
நீயே என் அண்டம்
எனக்கானவனே
என்னை தேடி வருவாயோ
உனக்காகவே காத்திருக்கும் உன்னவள்
நானே!

கவிஞர் மோனிஷா

# இருவர்

இரண்டு ஆண்களின் அறிமுகம்
அரசியல் தொடங்கி
அகிலம் வரை உற்சாகமாய்

பலரின் காரணங்கள் இவர்கள்
பேசும் பொருளின் காரணிகளாய்

ஒரு கோப்பை தேநீரின் ஆயுள்
இவர்கள் வார்த்தைகளின் மரணம் வரை

எல்லா சொற்களும் இவர்கள்
நாக்கில் நடமாடும் எழுத்துப்பிழைகளாய்

தேநீர் கடையில் சத்தத்தின்
சந்தோஷமாய் இவர்கள்

இவர்களின் விவாதம் தேநீர்
கோப்பைகளில் தினந்தோறும் ஒட்டடையாய்

இவர்களின் அரட்டையால்
நிமிடங்கள் கூட நின்று போன
ஊமைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

உலகத்தை ஆட்சி செய்யும் ஐந்து பூதம் ;
உயர்வாழ எவ்வுயிர்க்கும் காற்றே வேண்டும் ;
இலங்கிடும்நல் இயற்கைதனில் அழிவும் வருமே ;
இயல்பளவில் ஐம்பூதம் மிகுந்தால் குறைந்தால் !
நலமனைத்தும் கூட்டி வரும் தென்றல் காற்று ;
நஞ்சென்றே மாறிவரும் புயலாய் காற்று !
நிலம்மீதில் காற்றாலை நல்மின் சாரம் ;
நேர்த்தியோடு வீட்டினிலே சுழலும் விசிறி !

பிறப்பு தொட்டு உடல் இயக்கும் மூச்சுக் காற்று ;
பிரிந்தவரின் உடல் தழுவும் அனலாம் காற்று !
உறவு வேளை எவ்வுயிர்க்கும் இன்பக் காற்று ;
உயிர்விடும்நாள் வழியனுப்பும் இறுதிக் காற்று ;
கிறங்கடிக்கும் காதலர்க்கு மோகக் காற்று ;
கேடுதன்னை விளைவிக்கும் மாசுக் காற்று !
பெறப்பட்ட ஒலியனைத்தும் வானின் காற்று ;
பேச்சும்இன் இசைப் பாடல் எல்லாம் காற்று !

வாழ்நாளை வளர்த்திடுமே யோக மூச்சு ;
வையத்தில் நீண்டு வாழ மூச்சுப் பயிற்சி !
ஆழ்ந்து வாங்கும் மூச்சினிலே நெஞ்சம் விரியும் ;
அழிக்க வரும் நோயெல்லாம் அகன்று பிரியும் !
பாழ் செய்யும் அழுக்காறு கீழாம் மூச்சு ;
பாசமிகு தொண்டுள்ளம் மேலாம் மூச்சு !
தாழ்மையுணர் வில் வருமே அறமாம் மூச்சு ;
சாதனையார் தேடிவரும் வெற்றி மூச்சு !

கவிஞர் ஆ சீ கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# செயல்வீரரைப் பின் தொடர்க!



வறுமையும் சுரண்டலும் வளர்த்தெடுத்த வாழ்வும்
அடிமையும் ஆதிக்கமும் அலையவிட்ட காலமும்
வேண்டி நின்ற விடுதலைக்காய் வீதியிலே போராடி
வாங்கிய அடிகளும் வீங்கிய உடலுமென
நடமாடிய பொழுதுகளில்
வீரமும் பற்றும் விளைந்து நிற்க
அகிம்சையின் பிள்ளையென
அமைந்திட்ட ஆட்சியில் வழிகள் அமைத்திட
வெளிச்சமெட்டாது இருளுக்குள்
தம்மை புதைத்தே நாளையும் நேரத்தையும்
நகர்த்திப் போகும் கிராமத்தில் எட்டாத
கல்வியின் பயனை அனுபவத்தின் தாய்மையில்
அனைவருக்கும் வழங்கிட
புதுமைத் திட்டங்களில் பிறந்திடும் கனவுக்குள்
தன்னையே ஒப்படைத்து தரணியில் தமிழகத்தை
தள்ளாட்டம் இல்லாமல் தன்மானத்தோடு திசைகாட்ட
எல்லா மக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை
நில்லாது நிறைவேற்றி
உணவும் உடையுமென பள்ளியைப் பெருக்கி
வளரும் பிஞ்சுகளை கல்வியில் நிறைத்து
ஏற்றத்தின் பாதையை இளமைக்குக் காட்டி
மாற்றத்தின் கவனத்தில் அறிவை ஆயுதமாக்க
மாநிலமெங்கும் மடிப்பிச்சை ஏந்தும் மனதோடு
நிதியினைத் திரட்டி நிர்வாகத்தின் வழியே
ஆலயங்கள் நிறுவி கல்வியை ஆண்டவனாக்கி
எதிர்காலத் தூண்களை இரும்பென உறுதியாக்கி
சமத்துவப் பாதையில் சகலரும் நடைபோட
அரசியல் வானில் அவதரித்த கடவுளாய்
ஏழையை ஏற்றிவிட ஏணியென உருமாறி
உறுதியும் ஊக்கமும் கொண்டே ஊருக்கென உழைத்திட்ட
கல்விப் பயிர் வளர்த்த கார்முகிலே
கருணையின் இதயத்தில் காலத்தை நிறைத்தவனே
உயிர் நீராய் கல்வியை வார்த்திட்ட உத்தமனே
உலகெலாம் உன் பெயரை உச்சரிக்கும் கல்வியெனும் சொத்து.




கவிஞர் இளையவன் சிவா

# அண்ணன் எனும் ஆன்மா




அடி கொடுத்து சென்றாலும்
அனைத்து அன்பு காட்டுவதிலே
அப்பனுக்கு நிகரானவன்

எத்தனை கூட்டம் ஆனாலும்
இடிப்பாடுகளில் சிக்கினாலும்
இறுக்கிப் பிடித்த கை விடுவதில்லை

நாம் செய்த தவறுக்கு தந்தையிடம்
தான் செய்ததென்று தலை குனிந்து
கெட்ட பெயர் வாங்கிடுவான்

இருட்டில் இருக்கும் பயத்தை போக்க
முன்சென்று ஐயம் போக்கி
என்னோடு இருந்தவன்

மிதிவண்டி மிதித்துப் பழகவும்
ஆற்றிலே நீந்தி பறக்கவும்
தட்சணையின்றி கற்றுத் தந்த குரு

தான் அடித்து வளர்த்தாலும்
நம்மை அடுத்தவர்கள் அடிக்க
அணு அளவும் அனுமதிக்காதவன்.

அண்ணனைப் பெற்ற தம்பிக்கு தெரியும்
அன்புருவில் அன்னையைக் கொண்டவன்
நிழலுருவில் தந்தையாய் நின்றவன்.

கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

# சுகமான சுமைகள்



படிக்கும் காலத்தில்
பள்ளி புத்தகங்கள் சுமப்பது
ஒரு சுகமான சுமைகளே!
வேலை பார்க்கும் கட்டத்தில்
பேரேடுகளை சுமப்பதும் சுகமே!
சம்சார பந்தமே
முக்கியமான சுகமான சுமைகளே!
மழலைகள் பிறந்தவுடன்
அவர்களை சுமப்பதும்
சுகமே! சுகமே!
வயது முதிர்ந்தோர்
பாதை கடக்கையில்
கை தாங்கலாக
அழைத்து வருவதும்
ஆனந்த சுகமே!
உழைக்கும் வர்க்கத்தினர்
மூட்டையை சுமப்பதும்
சுகந்தமான சுமையே!

செல்லப் பிராணிகளை கைகளால்
தூக்கி சுமப்பதும் சுகமான சுமைகளே!
பேரக்குழந்தைகளை முதுகில் உட்கார வைத்து
சவாரி செய்வதும் சுகமான ஆனந்த சுமைகளே

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# விந்தைமிகு மனம்

மனம் எனும் நந்தவனச் சோலை
தினமும் மனிதனை ஆட்படுத்தும் ஆலை
இன்ப நிகழ்வுகளை அரங்கேற்றி மகிழ்ந்தே
துன்ப துயரங்களைப் புடம்போட்டுக் காட்டும்

ஒருநாள் களிப்பில் திளைத்து மிதந்திட
மறுநாள் கவலையில் நசுக்கிப் பொசிக்கிடும்
கண்களுக் கெட்டாத விடயங்களைக் கூட
கால்கை வைத்து சிந்திக்கத் தூண்டும்

இரவும் பகலும் மாறுவது போன்றே
அடிக்கடி மாறி நாட்களைப் பயணித்திடும்
விண்ணை விஞ்சிடும் எண்ணச் சிறகுகளால்
கற்பனை வானில் சிறகடித்துப் பறந்திடும்

பக்குவப்பட்ட மனது நிறைகளைப் பார்க்க
சஞ்சலப்பட்ட உள்ளம் சரிவுகளைத் தேடும்
ஆணவம் குடியேறி அகந்தை துளிர்க்க
கணப் பொழதுகளையும் கடுமையாகத் தாக்கிடும்

நற்பண்பை மனதில் ஆழமாய் விதைக்க
குணக்குன்றுகள் பாரினில் கிளைகள் விரிக்கும்
நல்லதை உள்வாங்கி நன்றியோடு வாழ்வோரே
வாழ்வாங்கு வாழ்வர் வையகத்தில் புகழோடு

அன்பு குடிகொள்ளும் உள்ளங்கள் என்றும்
ஆண்டவன் வாழும் இல்லங்களே யாகும்



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

படிக்காத மேதையே கறுப்பு தங்கமே
ஏழைகளின் வாழ்வில் ஒளி விளக்கானாய்
மதிய உணவை கொண்டு வந்தாய்
அஞ்சாத சிங்கமே நாடு போற்றும்
வயிற்றுக்கும் அறிவுக்கும் ஒளியேற்றி வைத்தாய்
உன் போல் தலைவரை காண்பதறிது
ஒன்பது வருடங்களாக சிறைவாசம் கண்டாய்
ஒன்பது வருடத்திலும் முதலமைச்சர் ஆனாய்
எளிமையான வாழ்வு வாழ்ந்து வந்தாய்
முத்தான திட்டங்களை மக்களுக்காக தீட்டினாய்
அணைகள் தொழிற்கூடங்கள் கட்டி அழகாக்கினாய்
கிங்மேக்கர் என்ற பட்டத்தையும் பெற்றாய்
வரலாற்று பக்கத்தை புரட்டி போட்டாய்
இளைஞர்களுக்கு முன் மாதிரியாய் விளங்கினாய்
பாரத ரத்னா விருதையும் பெற்றாய்
மறக்க முடியாத வழிக்காட்டி நீயே



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# காலனே கவனமாயிரு!

காலனே கவனமாயிரு
குருதி குடிக்கின்ற
உனது குருட்டுத் தனத்தை
உடனே நிறுத்து
மூளை இல்லாத
கோழை உனக்கு
அப்பாவி மக்கள்
நாங்கள் விடுக்கின்ற
இறுதி எச்சரிக்கை இது
காலனே கவனமாயிரு.
***

உந்தன்
கண்மூடித் தனங்களை
மண்மூடி மறையவை
மண்ணிலே இன்னுமின்னும்
கழுதைக் குணங்களையும்
காவாலித் தனங்களையும்
காட்ட வராதே
காட்டாற்று வெள்ளம் போலக்
கட்டறுத்துப் பாயாதே
கட்டளையை மீறாதே
காலனே கவனமாயிரு.

எங்களின்
இருப்பிடங்களுக்குள்
அத்துமீறி நுழையவும்
அடாவடித் தனங்களைக் காட்டவும்
ஆர் ஆணையிட்டது?
எமது சுதந்திரத்தை
உன்னை யார்
சுரண்டச் சொன்னது
உனது கையிலே இருக்கும்
கொலைக் கயிற்றை
உனது கழுத்துக்கே எறி இனி
காலனே கவனமாயிரு!



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (வெல்லபதியான்), கிழக்கிலங்கை

# இயற்கையோடு நான்

நகர்ந்து போகும் மேகங்களை
தழுவிக் கொள்ளும்
மேற்குத் தொடர்ச்சி மலை

பாலாடையைப் பரப்பியது போல்
முத்தமிடும் பனிக்காற்று

கருக்கலைக் கூவிச்சொல்கிறது
கூரைமேல் கொண்டைச் சேவல்

இளங் கன்னியின் அழுகையாய்
வழிந்தோடும் சிற்றோடை

விடியலைத் துரத்திக் கொண்டு
வலசை போகும் மைனாக்கள்



கிளைகளில் நகர்ந்தபடி
பழங்களைக் கொத்தி ருசிக்கும்
அய்யனார் கோயில் காகங்கள்

செல்லாயியம்மாள்
குடிசை வீட்டுத் திண்ணையில்
இறைக்காகக் காத்திருக்கும்
சிட்டுக்குருவிகள்


காடு திருத்த
கழனி பெருகியது
மாரியப்பன் வயலுக்குள் யானை

உண்டி வில்லிலிருந்து
புறப்பட்ட ஒவ்வொரு கல்லும்
இயற்கையோடு நான் பயணித்த
நினைவுகளை வீழ்த்துகிறது

பூட்டிய வீட்டுக்குள்ளிருந்து
கல்லெறிந்து கலைத்த கோமாளிகளால்
அகதியாய் இடறி
வரைபடத்தில் வாழ்கிறது இயற்கை

கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# கிராமத்து வாசனை



ஆத்தோர ஆலமரம் சேதி ஒன்னு
கேட்டு சொல்லு
ஆடிவரும் பூங்காற்றே அசராமல்
போயி சொல்லு.

தந்தான தானனா தந்தான தானனா

ஏரிக்கரை ஓரத்திலே எஞ்சாமி
உன்னைத்தேடி.
ஏத்தம் இறக்கையிலே
எம்பாட்டு கேட்கலையா.

தந்தான தானனா தந்தான தானனா

வஞ்சிமகள் உன்னை நினைக்கையிலே மனம்
வானுயர பறக்குதடி.
உதட்டோர புன்னகையும்
உறைந்தே போகுதடி.

தந்தான தானனா தந்தானா தானனா

கும்மிப் பாட்டு நீ படிக்க
குலவை சத்தம் கேட்கையிலே.
கொட்டியடிக்கும் கும்மிகளே
தட்டிவிடும் ஓசையிலே.

மாறாத தாளத்தின் மறையாத
வாசனையும்.
மடிதேடும் இசையும் மனமாற
இளைப்பாறும்.

ஆசைமச்சான் உனை நினைச்சு
அல்லிமலர்ச் சூடி.
நெஞ்சம் நிறைந்திடவே நேசம்
ததும்புதய்யா.

ஏத்தம் இறக்கையிலே சாராக்காத்து
வாசத்திலே.
வாய்ப்பாட்டு படிக்கையிலே
இறக்கைக்கட்டி பறக்குதய்யா.

மனமும் மயங்கியே மருதாணி வாசத்திலே .
மாயலோகத்திலே மச்சான் உன்
நினைவினிலே.

ஆத்தோர ஆலமரம் சேதி ஒன்னு
கேட்டுச் சொல்லு.
ஆடிவரும் பூங்காற்றே அசராமல்
போயி சொல்லு

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# உயர்ந்த நம் தேசம்



சமத்துவம் சமாதானம்
வாழ்வில் வேண்டும் உயர்ந்திட.
கருணையும் இறக்கமும்
இதயத்தில் இருத்தியே
உயிர்களை நேசிக்கும்
உயர்ந்த மனம் வேண்டுமே.

ஜீவகாருண்யம் வளர்த்தே
கருணை கடலாய் வாழ்ந்திட்ட
மகான்களின் பூமியில்.
இரக்கமனம் வேண்டுமே
இதயம் சிறக்க வாழவே.

அரண்மனை வாழ்வையும்
துச்சமாய் எண்ணியே
ஆசை என்னும் பெருங்கடலை
தூர்த்திட்ட புத்தரும்.
போதித்த நல்வாழ்வு தான்
வாழ்வில் உயர்ந்த லட்சியம்தான்.

கத்தியின்றி இரத்தமின்றி
யுத்தத்தின் முன் நின்று
அகிம்சை என்னும் ஆயுதத்தால்
அறநெறி காத்திட்ட
உத்தமரின் கருணையால்
*உயர்ந்த நம் தேசமே*.

தேசமும் மொழியும்
நமது இரு கண்களாய்
போற்றிடும் குணமே.
பாரதம் காத்திடும்
இந்தியனின் நல் குணமே.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# ஓவியம்

காடுகள் பற்றிய
ஓவியப் போட்டியில்
நட்டதும்
வளர்ந்து விட்டன
எண்ணிலடங்கா
என் மரங்கள்
பசுமையை மட்டும்
பறைசாற்றிய நான்
தோற்றுப்போனேன்.
என் ஓவியத்தில்
எங்கு தேடியும்
கிடைக்கவில்லை
வேடனும், மரவெட்டியும்
ஒளித்து வைத்த
பறவைகளின்
சத்தம் மட்டும்
காதில் தேனாய்
ஒலித்துக்கொண்டேயிருக்கும்.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அறுவடை செய்வோம்



அன்பால் சூழ்ந்த அகிலத்தை
அன்பினாலே அறுவடை செய்திடுவோம்!
அறிவுசார் சங்கதிகளை ஏற்று
அவலங்களை அறுவடை செய்வோம்!

குதூகலத்தை ஏற்று
குரோதத்தை அறுவடை செய்வோம்!
களிப்புதனை சிரமேற்று
கயமையை அறுவடை செய்திடுவோம்!

நேர்மையை நிலைநாட்டி
கையூட்டை அறுவடை செய்வோம்!
சுறுசுறுப்புதனை செம்மையாக்கி
நேரமின்மையை அறுவடை செய்வோம்!

பண்பையும் பாசத்தையும் ஏற்று
பகையை அறுவடை செய்வோம்!
பழமைதனை ஏற்று
பகட்டை அறுவடை செய்வோம்!

பிறருக்கு கொடுத்தலை தடுத்திடாது
இயன்றதை நாமும் கொடுத்திடுவோம்!
பயிருடன் வளரும்
களைகளை அறுவடை செய்வது போல

தூய மனம் கொண்டு
துன்பங்களை அறுவடை செய்வோம்!
இயலாதோருக்கு உதவி இல்லை எனும்
நிலையை அறுவடை செய்வோம்!

சமூகமதில் வளரும் களைகளை
வேருடன் பிடுங்கி எறிந்திடுவோம்!
கல்வியின் தனித்துவத்தை ஏற்று
கல்லாமையை அறுவடை செய்வோம்!

குழந்தைத் தொழிலாளர் முறைதனை
அறுவடை செய்வோம்!
நூல்களின் சிறப்புதனை ஏற்று
நூலகங்கள் பல செய்திடுவோம்!

ஆறிலும் சாவு நூறிலும் சாவு எனும்
கூற்றை விடுத்து
ஆறறிவு கொண்ட நல் மாந்தராய்
நாமும் மாறிடுவோம்!

நன்மையை நாமும் நிதமும் விதைத்து
நன்மையை அறுவடை செய்து
அனைவரும் பங்கிடுவோமே!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# விடையறியாப் பயணம்



வழிதெரியாத பாதைகளில்  வாழ்க்கைப் பயணம்!
விழிக்க வைக்கும் விடையறியாக் கேள்விகள்!
நம்பிக்கையின் துணையொடு நடைபோடுகின்றோம்!
இன்ப துன்பங்களை எதிர்கொண்டு தொடர்கின்றோம்!
என்றாவது ஒருநாள் வசந்தம் வருமென்ற
நம்பிக்கை மனத்துள்ளே ஒளிகாட்டும் விளக்காக!
முடிவில்லாத் தொடர்ச்சி !முடியுமென்ற முயற்சி!
அனுபவங்களை விடையாய் அளித்திடும் காலம்!
எதுவும் நிலையில்லை என்றுணர்த்தும் ஞாலம்!
இருளில் ஒளிக்கீற்றாய் கணநேர மின்னல்கள்!
குறுகிய காலத்தில்  உருவாகும் மாற்றங்கள்
வறுமை நிலைமாற்றி வாழ்வினிமை சேர்த்திடுமே!
இருப்பதைக்  கொண்டு இன்புற்று வாழ்பவர்கள்
நேர்வழியில் பயணித்து நிம்மதியாய் வாழ்ந்திருப்பர்!
பொன்னும் பொருளும் இன்னும் வேண்டுமென்று
எந்நாளும் நினைப்பவர்கள் இவ்வுலகைத் துறக்கையிலே
தன்னுடன் எதையும் கொண்டுசெல்லப் போவதில்லை!
பேராசை, பொறாமை கொண்டு பொருள்சேர்த்தும்
பெருந்தொற்று, பேரழிவில் மறைந்தவர் எத்தனையோ!
பிறர்க்குதவி வாழ்தலே பிறவியின் பயனாகும்!
பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில்
சிறப்புடன் வாழவைக்கும் சீரிய சிந்தனைகள்!
விடையறியாப் பயணங்களில் தேடல்களே வாழ்க்கை!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# ஈமானியக் காதல்

கண்களில் கண்ணீர் மல்க
சுற்றத்தாரின் ஆசிப் பொன்மொழிகள்
செவிகளை இனிமைப்படுத்த
மலக்குகளின் பிரார்த்தனைக்கு மத்தியில்
கரம் கோர்த்தது அந்த ஹலாலான காதல்.

பொன்னாடை பூண்ட
தன் சுவன தேவதையின் நுதலில் ஒளி பொருந்த
தன் காதலை நுதல் மேல்
முதல் முத்தமாய்க் கொட்டித் தீர்த்தான்
அந்த சுவனச்சோலையின் கதாநாயகன்.

பின்னரை இரவில் அல்லாஹ்வை நினைந்தவனாக,
இறை காதலை இன்னுமின்னும் பலப்படுத்த
தன் சுவன தேவதையோடு
சிரம் தாழ்த்தினான் அர்ஷின் அரசனிடம்.

காதல் பெருக
இறையருள் உள்ளத்தில் இறுக
தினமும் இன்பத்தைப் பருக
இன்று தயாராகி விட்டன
சுவனச் சோலையின் அவ்விரு
ஐ பொருந்திய பட்டாம்பூச்சிகள்.



கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி, கிழக்கிலங்கை

# உணர்வின் ஓசை



ஓர் ஓசை கண்ணயர்ந்து
கொள்வதன் மறைமுகம்
உலா வந்த உணர்வுகளின்
மொத்த மௌனம் தான்

தட்டுத் தடுமாறிய எண்ணங்களைக்
குவித்து வேறுபிரிக்க தக்க
தருணம் கைவிரித்து
விளையாடிக் கொண்டது


எந்த அருகாமையும்
பயனற்றுப் படுத்துறங்கும்
வல்லமை பெற்றவை
அந்த நிமிடங்கள்
எம்மைத் தட்டிவிடத்தான்

வேறொன்றுமில்லை எம்மை
நின்று நிறுத்திக் கொள்ள
அன்பும் ஆதரவும்
வேரறுந்து தொங்குவது
வலிமைக்கு வலுச்சேர்க்கவே

வானக் கதவுகள்
தங்கு தடையின்றித்
தட்டப்படும் நீ நீயாக
வாழும் போது மட்டும்.

கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# தமிழன் சிறப்பு



தமிழரின் புகழை தமிழன் எங்குமே
உமிழ்நீர் சிறப்பில் உன்னத வளர்ச்சியே
புவியில் விளம்பிய புண்ணயம் சேர்த்தே
குவிந்ததே புகழும் குவலயம் முழுவதுமே

பண்டைய காலமும் பன்முகச் சிறப்பாய்
உண்டான பெருமை உவந்தே போற்றுமே
அரிச்சுவடி அரும்பிய ஔவை பிராட்டியும்
அருந்தமிழ் முழங்கியே அசத்தினார் பாரிலே

பெருமையை தரணியில் பெருமையாய் சாற்றியே
வருங்காலம் எண்ணியே வசந்தம் ஆக்கினரே
ஈரடி குறளில் ஈந்தாரே வள்ளுவரும்
போராடி விளக்கமும் போட்டனரே பலருமே

மேன்மை பொருந்திய மேதினியில் சிறப்பாய்
நன்மை நல்கியே நவின்ற நற்றமிழே
சங்கம் வளர்த்து சரளமாய் விளம்பியே
எங்கும் பரப்பிய எந்தமிழ் சிறப்பே

முப்பால் முழங்கிய மூதறிஞன் தமிழை
தப்பாமல் படித்தே தரணியில் சிறப்போமே
சரளமாய் தெளிந்து சஞ்சலம் நீக்கியே
கரமாய் போராடியே கருத்தாய் மொழிந்தனரே

கடையெழு வள்ளலும் கடமையில் முந்தியே
மடையென திரண்டே மணியாய் பரப்பினரே
எழில் கொஞ்சும் எந்தமிழ் இயற்கை
தொழிலாய் விவசாயி விவசாமும் சிறப்பே

பார்புகழ் போற்றும் பாசமிகு பண்பிலே
சீர்பல பெற்றே சிறந்தாரே உலகிலே
பண்பாட்டுக் கலைகளை பரவசமாக பரப்பி
உள்நாட்டு நாகரீகத்தை மேல்நாட்டில் செதுக்கினரே

வந்தாரை வாழவைக்கும் வளமையான தமிழகமே
தந்ததே புதுமையில் தன்னிகரற்ற செழுமையே
கால்நடைகள் சிறக்க கண்டதே வெண்புரட்சியும்
நெய்தலில் நிரப்பிய நீலப்புரட்சி மென்மையே

உணவில் மேம்பட்ட உன்னத பசுமையும்
விதவித புரட்சியாய் விளைவித்ததே மண்ணிலே
தமிழின் பெருமையை தரணியும் போற்றுமே
தமிழரின் வளமையை தாரகையும் இயம்புமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# அது அந்த காலம்!

ஞாபகம் ஞாபகம் வருகுதே!
எந்த காலமும் வழங்கிடா
ஒற்றுமை அன்பு புரிந்துணர்வு வழங்கிய
கூட்டு குடும்பக் காலம்
முற்றிலும் இயற்கை சூழ
முற்றமும் நெல்லால் அலங்காரம்
அங்கு கதிரவன் வந்து
கருகிட சூழலை வைத்திடுவான்.



படத்தைப் பார்த்ததும்
பாசமுடன் உறவுகள் ஒன்றாக
சில்லுக்கோடு கிட்டிப்புள்
விளையாட்டு விளையாடியது
ஞாபகம் வருகிறது
சின்ன வீடு சிரித்து மகிழ்ந்த வீடு
வீட்டின் முன்னாடி ஒரு விறாந்தை
ஆனால், செல்வமாய் நின்ற வீடு

மாலையானதும் கொண்டாட்டம்
ஏன் என்று பார்க்க திண்டாட்டம்
இரவில் உறவுகள் கூடி
இனிய கதைகள் பல பேசி
முற்றத்தை உறவுகளால் நிறைத்து
நிலாச் சோறு உண்டு
இயற்கயின் காற்றில் சுவாசம் கண்டு
உவகையும் கண்டனர் அந்தக் காலம்
அது அந்த காலம்.
மருதம் சூழ்ந்த இந்தப் பூமி
பச்சைப் பசேலென நான்கு பக்கம்
அலங்கரித்து நிற்க.

நடுவினில் ஒரு மனை
மாடுகள் பார்த்ததும்
முன்னாடி வீட்டில் கோமாதா ஞாபகம்
செல்வம் கொளிக்கும்
வீட்டில் ஆனந்த உற்சாகம்
இவையெல்லாம் இன்று இல்லை
தொலைத்து நிற்கிறோம் நாம் இந்நாளில்!

இயற்கையின் பிடியில் அன்று
செயற்கையின் அடிமை நாம் இன்று!

ஞாபகங்கள் வந்து மெல்ல காதுகளில் சொல்ல
எழுந்தேன் உடன் எழ முடியவில்லை!
வேலையின் உச்ச கட்டம் திரும்ப முடியவில்லை!
வீணாய் தேடி தேடித்தான் இருக்கிறோம்
இறுதியில் கொண்டு செல்வதறக்கு இல்லை எதுவும்!
வேலை நேரம் முடிய அந்த நாளுக்காக ஏங்கி
நடக்கின்றேன் பாதையில் அந்த நாள் ஞாபகங்களோடு.

கவிஞர் திருமதி. ஜா. கிங்ஸ்லி

# உந்தன் பார்வையில் மயங்கினேனடி

வார்த்தைகள் வரவில்லை மௌனம் வந்ததே
பேசும் மொழிகள் எல்லாம் மறந்துப்போனதே
முல்லைக் கொடியென நானும் தாங்கிடுவேன்
உன்னையே நுகந்திடுவேன் மணக்கும் முல்லையே

நித்தமுமே மல்லிகையே வாசம் நுகர்வேனே
செவ்விதழ் இதழ்களில் முத்தங்கள் தருவேனே
உடலெங்கும் அனலாகிட அணைத்திடுவேனே
புன்சிரிப்பினில் நானும் புத்துணர்வு வருமே

வியப்புகள் செய்து குழிக்குள் தள்ளினாயே
கருவிழியே எந்தன் மனசைக் கலந்தாய்
எண்ணத்தில் நிறைந்தாய், நிறத்தில் சேர்ந்தாய்
இனிமை நாயகியே நாணத்தால் வென்றவளே

இதமான அணைப்பில் அனலாக்கினாயே
தோளில் தலைவைத்தாய் துணையென வந்தவளே
வாழ்வின் வரமான வசந்தமானத் தென்றலே
நினைவினில் நின்றாய் கனவினில் வந்தாய்

தொடர்வேன் நிழலாய் உன்னைத் தாங்குவேன்
இனிநீமட்டுமே எனக்குச் சொந்தமாகினாயடி
நானும் உன்னைப் பிரியாமல் இருப்பேனடி
உந்தன் பார்வை ஒன்றே எனக்குப் போதுமே



கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம், சென்னை



பிடிக்காத அனைத்தையும்
முரண் என கொள்வது
ஆபத்து !
****
பெண்ணியம் பேசும் ஆண்களே
அதை வழி மொழியும் பெண்களே
கற்பழிப்பு செய்திகள் காற்றிலாவது வருகிறதா?
***
எச்சில் துப்பும் உரிமை சட்டம்
என் எதிரிக்கு
தெரியும் போல !
***
மகளே
மடிக்கணினி சூடு
மாதவிடாய்க்கு கேடு
***
ஏற்கனவே பேசியது தான் எல்லாம்
நீங்கள் தினம் பேசி
வீண் போகாதீர்கள்
***
அபாயகரமான வளைவு
உதிரம் உதிரும் இடம்
இதுவல்ல
***
கணவாய் மீன் சாப்பிடும்
கனவாய் வருகிறது
****
இவ்வளவும் ஏன்
என்றாள்
நீ என்றேன்
***
புனித நூலுக்கு பதில்
பெற்ற பிள்ளைகள் மேல்
சத்தியம் வாங்குங்கள்
***
நீதிமன்றங்களில்
உண்மைகள்
வழு பெறும்
***
சொல்ல போகும் பதில் தெரிந்தும்
கேள்வி கேட்கும் நோய்
இந்தியாவில் மட்டும் தான் உள்ளது

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

## ஏற்றுமதி இறக்குமதி

அத்தியாயம் 19

(புதினம்)



நவசேவா கஸ்டம்ஸ் கட்டிடத்திற்கு வந்திறங்கிய போது, குட்டி அரசுக்காக காத்திருந்தான்.
"என்ன குட்டி நலமா?" கைகுலுக்கியபடி அரசு கேட்டான்.

"நலத்திற்கு என்ன குறைச்சல். வேலைப் பளுதான் அதிகமாகி விட்டது. சொல் எந்த மாதிரி பிசினஸ் பண்ணலாம் என்று முடிவு செய்துள்ளாய்?"

"இப்படி நடுத்தெருவில் நிற்க வைத்து பேசுவாயா? இல்லை உன் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்வாயா?"அரசு குட்டியின்முதுகில் ஓங்கி தட்டியவாறு கேட்டான்.

"ஸாரிப்பா. வா, முதலில் சாயா குடிக்கலாம்." இருவரும் நவசேவா கஸ்டம்ஸ் அலுவலகத்திற்கு அருகிலிருந்த ரெஸ்டாராண்டில் அமர்ந்து டீ ஆர்டர் கொடுத்து விட்டு "சொல்லு, அப்பா அம்மாவை விட்டு விட்டு வந்து விட்டேன் என்றாய். எப்போதாவது தொடர்பு கொண்டாயா?" என்று கேட்டான் குட்டி.

"தொடர்பு கொண்டால் திரும்ப என்னை அழைப்பார்கள். பழைய குருடி கதவைத் திறடி கதையாக அப்பாவின் வியாபார சாம்ராஜ்யத்தை கட்டி அழச் சொல்வார்கள். சரி அந்தக் கதையெல்லாம் எதற்கு? நான் சொன்ன விஷயங்களெல்லாம் செய்தாயிற்றா?" என்றான் அரசு.

"ஆபீஸ் பார்த்தாச்சு. டெலிபோன், புக் பண்ணியாச்சு. நீ சொன்ன மாடலில் பேக்ஸ் மெஷின், கம்ப்யூட்டர் எல்லாம் ஆர்டர் கொடுத்தாச்சு."

"இனி நீ வந்து பார்த்து ஓ.கே சொன்னால் சரி. மற்றபடி எல்லாம் முடிந்த மாதிரிதான். ஆமாம் மார்க்கெட்டிங் எல்லாம் எந்த வகையில் முடிவு செய்திருக்கிறாய் அரசு.?

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

"கப்போலி தொழிற்சாலை அருகே இறக்குமதி செய்கிற ஏற்றுமதி செய்கிற அத்தனை கம்பெனியிலும் கொஞ்சம் ஏறி இறங்கினால் வியாபாரம் வழிக்கும் வந்து விழும். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை."

"அப்போ சரி." காலி டீ கப்பை மேஜையில் வைத்து விட்டு "கிளம்பலாமா?" என்றான். "ஓ... தாராளமாக."

இருவரும் குட்டியின் டாட்டா சுமோவில் பயணித்து குட்டியின் அலுவலகத்திற்கு வந்தனர். எல்லோரும் அவரமாக பணியில் இருந்தது மிகவும் வியப்பாக இருந்தது அரசுவிற்கு.

"பராவாயில்லை குட்டி. பிசினஸில் எஸ்டாபிளிஸ் ஆகிவிட்டாய் என்று நினைக்கிறேன்."

"ஏதோ இப்போது தான் தவழ ஆரம்பித்திருகிறேன். ஒரு நிமிடம் சில இ.. மெயில்கள் அனுப்ப வேண்டும். முடித்து விட்டு இருவரும் உனக்காக பார்த்திருக்கும் ஆபீஸை பார்க்கப் போகலாம்."

குட்டியின் சிறிய சிறிய வேலைகளை முடித்து விட்டு ஆன்கரேஜ் பில்டிங்கில் மூன்றாவது மாடிக்கு அரசுவின் ஆபீஸிற்கான இடத்திற்காக வந்தார்கள். உள்ளே நுழைந்ததும் "வாவ்.... ரொம்ப அழகாக இருக்கிறது." என்றான் அரசு.

"எப்படி அரசு. பிடித்திருக்கிறதா?"

"ரொம்ப பிடித்திருக்கிறது. இந்தச் சனிக்கிழமையே பூஜை போட்டு ஆரம்பித்து விடலாம். உள்ளேயிருக்கும் கேபினில் இருப்பவருக்கு 'லாப் ... டாப்' கொடுத்து விட்டலாம். ஆமாம் ஒரு கம்ப்யூட்டர் தானே ஆர்டர் கொடுத்திருக்கிறாய்."

"ஆமாம் அரசு.", "இன்னும் இரண்டு கம்ப்யூட்டருக்கு ஆர்டர் கொடுத்து விடு.", "சரி. வேறு ஏதாவது மாற்றங்கள்?"

"முதலில் ஆபீஸ் ஆரம்பிக்கட்டும் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்." அரசு சொல்லி முடிப்பதற்குள் அவன் 'செல்' லில் சங்கீத ஒலி ஆரம்பித்தது.

'செல்'லில் எண்ணைப் பார்த்து விட்டு "சொல்லு திலக். எப்படி இருக்கிறாய்." என்று கேட்டான் அரசு.

"ரொம்பா நலம். எங்கே இருகிறாய்?", "நவ சேவா அலுவலகம் பார்த்து முடிவு செய்து கொண்டிருக்கிறேன்."

"ஏதோ ரொம்ப ஆழக் கால் வைக்கிறாயா? அல்லது அகலக்கால் வைக்கிறாயா என்பது புரிய வில்லை. ஆனால் உன்புயல் வேகம் பிடித்திருகிறது. ஆமாம் போன வாரம் பூனே போயிருந்தாயே அலுவலகம் ஆரம்பித்து விட்டதா."

"ஆமாம், உனக்குத்தான் அதைப்பற்றி விவரமாக இ.மெயில் போட்டிருந்தேனே. அதிலே நாசிக்கில் இன்னொருவருடன் சேர்ந்து மருந்து வியாபாரம் ஆரம்பித்த தென்றும் குறிப்பிட்டிருந்தேனே. அந்த மெடிசினுக்கு வெளிநாட்டு ஆர்டர் கூட கிடைத்திருக்கிறது. ஏற்றுமதி முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். என்பதையும் எழுதியிருந்தேன்."

"அப்படியா, வெரிகுட் . இ.மெயில் பார்க்க நேரமில்லை. அடுத்து எங்கே?"என்றான் திலக்.

"சிங்கப்பூர் போகிறேன்" என்றான் அரசு.

தொடரும்...

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

நூல் அனுபவம்

## பெருமாள் முருகன் ; வகை: நாவல் ; பக்கங்கள்:200

பெருமாள்முருகன் இவர் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கூட்டப்பள்ளியில் பிறந்தவர். தமிழ் வட்டார நாவலின் முன்னோடியாகிய எழுத்தாளர் ஆர். சண்முகசுந்தரம் குறித்து ஆய்வு செய்து தமிழ் இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். அரசு கலைக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். ஆத்தூர் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் ஓராண்டு முதல்வர் பொறுப்பு வகித்தார். பின்னர் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றி செப்டம்பர் 2022இல் விருப்ப ஓய்வு பெற்றார்.




மாதெருபாகன் நாவலின் இரு வெவ்வேறு கோணங்களில் விரித்து அர்த்தநாரி,ஆலவாயன் என்று இரு பெரும் நாவல்களை எழுதியுள்ளார் பெருமாள் முருகன் இதில் நமக்கு பரிசாக இந்துமதி அக்கா அனுப்பியதென்னவோ அர்த்தநாரி நூல் தான் அதையே விமர்சிக்க முயற்சி செய்கிறேன்.மாதொருபாகனின் அடுத்த கோணம் என்பதால் இதில் ஆரம்பத்திலேயே சில விஷயங்கள் நாசூக்காக சொல்லப்பட்டு விட்டது. சில விஷயங்கள் முன் பின்னாக அலசி ஆராய படுகிறது. நாட்டுப்புற கதைகளும் அங்காங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருச்செங்கோடு பக்கம் இருக்கும் அன்றைய வாழ்வியலை கண்முன்னே கொண்டு வருகிறார் எழுத்தாளர் பெருமாள் முருகன். மாதொருபாகன் படித்த அனைவருக்கும் ஒரு கேள்வி இருக்கும் அந்த கேள்விக்கான பதிலாக தான் இந்த நாவலை எழுதியுள்ளார் பெருமாள் முருகன்.

ஒரே புள்ளியில் தொடங்கிய பயணம் மூன்று வகை பயணமாக மாதொருபாகன், அர்த்தநாரி,ஆலவாயன் என்று பயணிக்கிறது இந்த

திரு. தினேஷ் கண்ணா, வழுதாவூர்

## நூல் அனுபவம்

ஒரே புள்ளியில் தொடங்கிய பயணம் மூன்று வகை பயணமாக மாதொருபாகன், அர்த்தநாரி,ஆலவாயன் என்று பயணிக்கிறது இந்த நாவல்.இந்த நாவல் முழுக்க குழந்தையின்மை, வறுமை, செல்வவளம் நிறைந்த வாழ்க்கை என்று வெவ்வேறு கோணங்களில் விரித்து எழுதியுள்ளார் பெருமாள் முருகன். தற்சமயம் தான் திருச்செங்கோட்டில் அர்த்தநாரீஸ்வரர் கோயில் திருவிழா வெகுவிமரிசையாக நடந்து முடிந்திருக்கிறது இதில் பதினான்காம் நாள் திருவிழா இப்போது பழைய முறையில் நடக்கிறதா என்றால் எனக்கு கேள்வி குறி? அறிந்தவர்கள் பதில் கூறலாம்.

ஆண் பெண்ணை தன்னுடையதாக பார்க்க நேரிடும் போது ஏற்படும் சிக்கல்கள், உறவு நிலை தடுமாற்றங்கள், மனக்கசப்புகள் என எல்லாவற்றையும் பேசுகிறது இந்த நாவல் ஆனாலும் மாதொருபாகன் ஏற்படுத்திய தாக்கத்தை இந்த அர்த்தநாரி நாவல் ஏற்படுத்தவில்லை. நான் திரும்பி மாதொருபாகன் வாசித்து விட்டே இந்த நாவலையும் வாசித்தேன் தொடர் நாவல் போல் கணகச்சிதமாக எழுதியுள்ளார் பெருமாள் முருகன்.

ஒன்றானவன் உருவில் இரண்டானவன்
உருவான செந்தமிழில் மூன்றானவன்
நன்றான வேதத்தில் நான்கானவன்
நமசிவாய என ஐந்தானவன்

இன்பச் சுவைகளுக்குள் ஆறானவன்
இன்னிசை ஸ்வரங்களில் ஏழானவன்
சித்திக்கும் பொருள்களில் எட்டானவன்
தித்திக்கும் நவரச வித்தானவன்

பத்தானவன் நெஞ்சில் பற்றானவன்
பன்னிருகை வேலவனைப் பெற்றானவன்
முற்றாதவன் மூல முதலானவன்
முன்னைக்கும் பின்னைக்கும் நடுவானவன்

திரு. தினேஷ் கண்ணா, வழுதாவூர்

ஆணாகி பெண்ணாகி நின்றானவன்
அவை ஒன்று தானென்று சொன்னானவன்
தான் பாதி உமை பாதி கொண்டானவன்
சரி பாதி பெண்மைக்குத் தந்தானவன்

காற்றானவன் ஒளியானவன்
நீரானவன் நெருப்பானவன்

நேற்றாகி இன்றாகி
என்றைக்கும் நிலையான
ஊற்றாகி நின்றானவன்
அன்பில் ஒளியாகி நின்றானவன்.

கண்ணதாசனின் இந்த வரிகள் இல்லாமல் என்னால் இந்த விமர்சன பகுதியை நிறைவு செய்ய இயலவில்லை.

இன்று தேசிய வாசிப்பு தினமாம் வாசகர், விமர்சகர்,எழுத்தாளர் அனைவருக்கும் என் இனிய வாசிப்பு தின நல்வாழ்த்துக்கள். வாசிப்பை நேசிப்போம்! தொடர்ந்து பயணிப்போம்!




திரு. தினேஷ் கண்ணா, வழுதாவூர்

# அரசன் சண்முகனார்

கட்டுரை

## பிறப்பு, கல்வி



மதுரை மாவட்டத்தில் உள்ள சோழவந்தான் என்னும் ஊரில் செப்டம்பர் 15, 1868 அன்று அரசப்பிள்ளைக்கும் பார்வதியம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். சைவவேளாளர் குலத்தைச் சார்ந்தவர். இயற்பெயர் சண்முகம். தந்தை பெயரிலிருந்து 'அரசன்' என்ற சொல்லை எடுத்து தன் பெயருக்கு முன்னால் வைத்துக் கொண்டதால் "அரசன் சண்முகனார்" என்று அழைக்கப்பட்டார்.


12 வயது வரை ஊர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அழகர்சாமி தேசிகரிடம் படித்தார். சோழவந்தானில் இருந்த கிண்ணிமங்கலம் மடத்தைச் சார்ந்த சிவப்பிரகாச சுவாமிகளிடம் இலக்கணம், இலக்கியம், தருக்கம், சோதிடம் ஆகியவற்றை கற்றார். பதினான்காம் வயதில் ஆசிரியருக்காக 'சிதம்பர வினாயகர் மாலை' என்னும் சிறு நூலை பாடினார். பதினாறு வயதில் தந்தை காலமாகவே கல்வி நின்றது.

## தனி வாழ்க்கை

1885-ம் ஆண்டு காளியம்மாளை மணம் புரிந்தார்.
1890 முதல் 1902 வரை மதுரை சிம்மக்கல் சேதுபதி பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். தலைமை ஆசிரியர் நாராயண ஐயர் தமிழ்ப்பாடத்திற்கான பாடவேலையை குறைத்ததால் தன் பணியைத் துறந்தவர், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் தொடங்கப்பட்ட சேதுபதி செந்தமிழ் கல்லூரியில் ஆசிரியராக சேர்ந்து 1906 வரை பணியாற்றினார். எப்போதும் நோயும் வறுமையும் கொண்டிருந்தார். பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாருக்கு தொல்காப்பியம் கற்பித்த ஆசிரியர் இவர். பண்டிதமணி இவருக்கு பொருளுதவி செய்திருக்கிறார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

## இலக்கிய வாழ்க்கை




விவேகபாநு இதழாசிரியர் மு.ரா.கந்தசாமி கவிராயருடன் உருவான தொடர்பால் இலக்கிய ஆய்வுக்குள் நுழைந்தார். 'மாலைமாற்று மாலை' என்னும் நூலை இக்காலகட்டத்தில் எழுதினார். இது இறுதியில் இருந்து தொடக்கம் வரை படித்தாலும் பொருள் மாறுபாடு அளிக்காத வகை செய்யுள்.

தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருக்குறள் ஆராய்ச்சி என்ற அவரது இரண்டு நூல்களும் எதிர்ப்புக்குள்ளாகின. அவற்றை தடைசெய்ய வேண்டும் என்று புலவர்கள் கோரினர்.

## திருக்குறள் - விவாதங்கள்

"அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை மாதர்கொல் மாலு மென் நெஞ்சு" என்ற குறளில் வரும் 'கனங்குழை' என்ற சொல்லுக்கு ஆகுபெயர் என இலக்கணக் குறிப்பு கூறுகிறார் பரிமேலழகர். இதே சொல்லுக்கு இலக்கணம் அன்மொழித்தொகை என்பார் சிவஞான முனிவர். அரசன் சண்முகனார் இதைப் பற்றிய விவாதத்தை முதலில் துவங்கி பரிமேலழகரின் உரையை நிலைநாட்டி சிவஞானமுனிவரை மறுத்தார். இவர் திருக்குறளில் பரிமேலழகரின் உரையை காண்டிகை உரையாகக் கொண்டு எழுதிய விருத்தி உரை ஆராய்ச்சி 'செந்தமிழ்' இதழில் வந்தது. பரிமேலழகரை ஒட்டியும் வெட்டியும் எழுதிய இவரது கருத்துகளுக்கு, சி.வை. தாமோதரம்பிள்ளை 'ஞானசித்தி' இதழில் பதில் எழுதினார்.


திரு. அ. வில்சன், இதழாசிரியர்

## இலக்கிய இடம்

சண்முகனாரின் தனித்துவம் என்பது முந்தைய உரையாசிரியர்களை, மரபுவழி இலக்கியங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அவற்றை விரிவாக ஆய்ந்து, தான் மாறுபடும் இடங்களில் தன் மறுப்புக் கருத்தை ஆணித்தரமாகப் பதிவு செய்தது. இதனால் இவர் வாழ்நாள் முழுவதும் கடுமையான விவாதங்களைச் சந்தித்தார். தொடர்ந்து விவாதங்களில் ஈடுபட்டு தன் கருத்தை ஆதாரங்களுடன் வலியுறுத்தி வந்தார்.

## படைப்புகள்

சிதம்பர விநாயக மாலை
மாலை மாற்று மாலை
ஏக பாத நூற்றந்தாதி
இன்னிசை இருநூறு
மதுரை மீனாட்சி அம்மன் சந்தத் திருவடிமாலை
திருவடிப் பத்து
நவமணிக் காரிகை நிகண்டு
வள்ளுவர் நேரிசை
இசை நுணுக்கச் சிற்றுரை
தொல்காப்பியப் பாயிர விருத்தி
திருக்குறள் ஆராய்ச்சி
திருக்குறட் சண்முக விருத்தி
நுண் பொருட் கோவை



## இறுதிக்காலம்

45 வயதுக்குப் பிறகு தொடர்ந்து வாதநோயால் துன்புற்றார். ஜனவரி 11, 1915 அன்று சோழவந்தானில் காலமானார்.

நாளை

# நமதே

## முயற்சி உடையவனுக்கு

## எட்டு திசையும்

## ஏற்ற திசைதான்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com